[23rd October 1964

(c) The Collector of Tirunelveli has been requested to take up the construction of a Reading Room at Athimedu Harijan Colony through the Panchayat Union, Palayamcottai utilising the surplus, if any, under the village works (discretionary) grant.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : சார், அந்த பஞ்சாயத்து யூனியனி லிருந்து தங்களிடத்தில் பணம் இல்லை என்று எழுதி அனுப்பியிருப் பதை ஒட்டி, சர்க்காரிலேயே கட்ட ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பணம் இல்லை என்ற தகவல் எனக்குக் கிடைக்கவில்லை. இது பஞ்சாயத்து யூனியனல் கட்டப்பட வேண்டும். கலெக்டர் கிராம வேலைத் திட்டத்தின் கீழ் அந்த ஊரில் மெடர்னிடி அண்ட் சைல்ட் வெல்பேர் சென்டர் கட்ட ஏற்பாடு ஆகியிருக்கிறது. ரீடிங் ரூம் கட்டவும் ஏற்பாடு செய்யப்படும்.

அறந்தாங்கி தாலூகாவிலே அரிசனங்களுக்கு வீட்டு வசதி

*74 கேள்வி.—**திரு. ஆ. துரையரசன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

அறந்தாங்கி வட்டத்தில் அரிசனங்களுக்கு காலனி வீடுகள் எத்தனை கிராமங்களில் கட்டித்தரப்பட்டுள்ளது ?

THE HON. SRI P. KAKKAN : Seventy-four houses have so far been constructed for Harijans in four villages in Arantangi taluk.

திரு. ஆ. துரையரசன் : மீமிசல் பக்கத்தில் ரூ. 52,000 செலவில் கட்டப்பட்ட 48 வீடுகள் பழுதுபட்டு விட்டதால் அதில் அரிசனங்கள் குடியேற முடியவில்லை. அது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. பூ. கக்கன்: தனிக் கேள்வி போடவேண்டும்.

கொல்லி மலையில் ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதி

*75 கேள்வி.—**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

கொல்லிமலையில் ஆசிரியர்களுக்கு "மலைச்சாதியினர் அபி விருத்தி நிதியிலிருந்து" வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : பஞ்சாயத்து யூனியன் கல்வி நிதியி லிருந்து கொல்லி மலையில் இரண்டு ஆசிரியைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொகையைப் பின்னர் மாநில அரசாங்கம் மேற்படி நிதிக்கு ஈடு செய்யும். இதைத்தவிர கொல்லிமலையில் மலைச் சாதியினர் வளர்ச்சிக்கான அபிவிருத்தி வட்டார நிதியிலிருந்து அல்லது ஹரிஜன நல நிதியி லிருந்து ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் எதுவுமில்லை.

23rd October 1964]

திரு. வி. ஆர். பெரியண்ணன் : தலைவர் அவர்களே, கொல்லிமலை யில் ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதி இல்லாததால், பல ஆசிரி யர்கள் நல்ல முறையில் பணியாற்றவில்லை என்ற தகவல் அரசாங் கத்திற்கு வந்ததா ? கொல்லிமலையில் உடனடியாக வீடு கட்ட அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கொல்லிமலையில் இரண்டு உபாத்தி யாயினிகளுக்கு விடுகட்ட ஏற்பாடாகியிருக்கிறது. ஆசிரியர் களுக்கு அரிஜன நிதியிலிருந்து கட்ட திட்டம் இல்லை. இனிமேல் தான் பரிசீலனை செய்யவேண்டும்.

Hostels for Harijan students

* 76 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Home be pleased to state the number of Harijan hostels proposed to be opened for boys and girls during the year 1964–65 in Salem district with the names of the places, taluk-wise?

கனம் திரு. பூ. கக்கன் : 1964-65-ல் சேலம் மாவட்டம், தர்மபுரி தாலுகாவைச் சேர்ந்த தர்மபுரியில் பெண்களுக்காக அரசாங்க விடுதி ஒன்றை ஏற்படுத்த உத்திரவிடப்பட்டுள்ளது. அதில் 30 பெண்கள் தங்கலாம்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : தலைவர் அவர்களே, சேந்த மங்கலத்தில் பெண்களுக்கு விடுதி துவக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டது. அதைப் பரிசீலனை செய்து கல்வி ஆண்டிலேயே துவக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : சேலம் மாவட்டத்தில் உள்ளதைப் பற்றிச் சொன்னேன். அங்கத்தினர் தரும் தகவல் சம்பந்தமாக கலெக்டரிடம் இருந்து தகவல் கோரி பின்னல் பரிசீலிக்கப்படும்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, இந்த அரிசன் ஹாஸ்டலுக்கு மாணவர்களைப் பொறுக்கி எடுக்க ஒரு குழு இருக் கிறதே—நான் பொதுவாக கேட்கிறேன், எந்தக் குறிப்பிட்ட இடத்தைப் பற்றியும் கேட்கவில்லை—அந்தக் குழுவில் யார் அங்கம் வகிக்கிறார்கள்.

கனம் சபாநாயகர் : ஒவ்வொரு ஹாஸ்டலுக்கும் வேறு வேறு ஆட்கள் இருப்பார்கள்.

SRI M. V. KARIVENGADAM. In general I am asking how the committee is constituted.

MR. SPEAKER : All right.

கனம் திரு. பூ. கக்கன் : சம்பந்தப்பட்ட ஆர்.டி.ஓ தலைவராக இருப்பார் ; மற்றதையெல்லாம் கலெக்டர் பார்த்துச் செய் கிறார்கள்.